**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. காப்பியத்தைச் செய்யுளில் எவ்வாறு குறிப்பிடுவர்?
2. மணிமேகலையின் ஆசிரியர் யார்?
3. திருத்தக்கதேவர் பாடிய வேறு நூல் எது?
4. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?
5. பெரிய புராணத்திற்கு வழங்கப்படும் வேறுபெயர் யாது?
6. சூளாமணியின் காப்பியத் தலைவர் யார்?
7. பாஞ்சாலியைத் துச்சாதனன் இழுத்து வரும் போது மக்களின் புலம்பலை பாரதி எவ்வாறு சாடுகிறார்?
8. 'வீரத்தாய்' காப்பியத்தின் தலைவி யார்?
9. கண்ணதாசன் நடத்திய பத்திரிகை எது?
10. சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த நூல் எது?

11. பாலைநிலம் தோன்றும் விதத்தை எந்நூல் குறிப்பிடுகின்றது?

12. நிலையாமையை உணர்த்தும் திணை யாது?

13. ஆநிரை கவர்தல் எத்திணையின் பாற்படும்?

14. குறிஞ்சித் திணை பாடவல்ல கவிஞர் யார்?

15. கைக்கிளை திணைப்பாடல்களுக்குச் சிறந்த உதாரணமாகத் திகழும் மூவேந்தர் பற்றிய நூல் எது?

### பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. ஐம்பெருங்காப்பியங்கள் எவை?
2. கம்பராமாயணத்தில் எத்தனை காண்டங்கள் உள்ளன? அவை யாவை?
3. சேக்கிழார் –சிறு குறிப்புத் தருக.
4. பாஞ்சாலியின் சபதம் யாது?
5. தமிழச்சி காவியம் தோன்றியதன் காரணம் என்ன?
6. முப்பொருட்கள் என்பன எவை?
7. பதிற்றுப்பத்தின் சிறப்பு யாது?
8. கைக்கிளை குறிப்பு வரைக.

### பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) சிலப்பதிகார வழக்குரை காதை குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பெரிய புராணம் உணர்த்தும் காப்பிய நெறி குறித்துக் கட்டுரைக்க.

2. (அ) சூதாட்டத்தில் பாண்டவர்களுக்குச் சகுனி உரைத்தவைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழச்சி, கொடிமுல்லை காப்பியங்களின் கதை சுருக்கத்தினை எழுதுக.

3. (அ) சங்க அகநூல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) ஆற்றுப்படை நூல்கள் குறித்துக் கட்டுரைக்க.

***